NOVEMBER/DECEMBER 2025

23UFTA15/23IFTA15 — தமிழில் சிறார் இலக்கியம்

Time : Three hours Maximum : 75 marks



பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. சிறார் இலக்கியம் எந்த வயதிற்குட்பட்டதாக வரையறை செய்யப்படுகிறது?

2. சிறுவர் இலக்கியத்தின் தந்தை என்று அழைப்படுபவர் யார்?

3. 'குழந்தை இலக்கிய வரலாறு' எனும் நூலை எழுதியவர் யார்?

4. 'வாண்டு மாமா' எனும் புனைப்பெயரில் சிறுவர் இலக்கியங்களை எழுதி வெளியிட்டவரின் இயற்பெயர் என்ன?

5. 'அலாவுதினும் அற்புத விளக்கும்' எனும் நூலின் ஆசிரியர் பெயரைக் குறிப்பிடுக.

6. தமிழ் சிறார் இலக்கியத்திற்குப் பங்களிப்பு செய்த பெண் எழுத்தாளர்களில் இருவரை குறிப்பிடுக.

7. 'விஞ்ஞான விக்கிரமாதித்தியன்' – எனும் சிறார் சிறுகதையின் ஆசிரியர் பெயரைக் குறிப்பிடுக.

8. தமிழ் சிறார் சிறுகதைகளில் எவையேனும் இரண்டினைக் குறிப்பிடுக.

9. 'பொன்னியின் தியாகம்' எனும் சிறார் நாடகத்தில் வள்ளல் பெயர் என்ன?

10. 'Alice in wonderland'எனும் நூலினைத் தமிழில் மொழிப்பெயர்ப்பு செய்தவர் யார்?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) சிறார் இலக்கியம் - வரையறை செய்க.

(அல்லது)

(ஆ) சிறார் இலக்கியங்களை வகைபடுத்தி எழுதுக.

12. (அ) அழ. வள்ளியப்பா-வின் சிறார் இலக்கியப் பணிகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) 'கல்கி' – கோபால கிருஷ்ணனின் சிறார் இலக்கியப் பணி குறித்து எழுதுக.

13. (அ) சிறார் இலக்கியத்தின் பண்புகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சிறார் இலக்கியத்தில் பின்பற்றப்பட வேண்டிய உத்திகள் குறித்து எழுதுக.



14. (அ) சிறார் இலக்கியங்களில் சித்திரக்கதைகள் (comics) பெறும் முக்கியத்துவம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சிறார் இலக்கியங்கள் புலப்படுத்தும் கடல்சார் செய்திகள் குறித்துப் புலப்படுத்துக.

15. (அ) சிறார் கலைக்களஞ்சியம் - குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பெரியசாமி தூரனின் சிறார் இலக்கிய பங்களிப்புக் குறித்து எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.

16. சிறார் இலக்கியத்தின் பல்வேறு பரிணாமங்களை விளக்கியுரைக்க.

17. சிறார் இலக்கிய படைப்பாளர்களின் சமூகப் பங்களிப்புக் குறித்து ஆராய்க.

18. சிறார் இலக்கியங்களின் வழி அறியப்படும் வரலாற்று மற்றும் அறிவியல் செய்திகளை விளக்கியுரைக்க.

19. சிறார் இலக்கிய படைப்பாளர்களும் - தமிழகம் அரசு விருதுகளும் - கட்டுரை வரைக.

20. தமிழில் சிறார் இலக்கியத்தின் மொழிநடைக் குறித்து ஆராய்க.
